செய்தி வெளியீடு நாள் : 26.09.2023

மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகள் குறித்தும் மற்றும் வடசென்னை வளர்ச்சி திட்ட பணிகள் குறித்தும் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இன்று (26.09.2023) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகள் குறித்தும் மற்றும் வடசென்னை வளர்ச்சி திட்ட பணிகள் குறித்தும் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்திலிருந்து பேருந்துகள் போக்குவரத்து நெரிசலின்றி செல்வதற்காக சாலை அமைக்கும் பணிகளாக 1. அயனஞ்சேரி முதல் மீனாட்சிபுரம் வரையிலும் 2. சி.வே.கே.சாலை முதல் ஊரப்பாக்கம் – நல்லம்பாக்கம் வரையிலும் 3. ஆதனூர் முதல் மாடம்பாக்கம் வரையிலும் சாலை அமைக்கும் பணிகளையும், முடிச்சூரில் புதிதாக அமையவுள்ள ஆம்னி பேருந்து நிறுத்திமிடத்தில் நடைபெறும் பணிகள் குறித்தும், மழைநீர் வடிகால் பணிகள், திடக்கழிவு மேலாண்மை, பூங்காக்களில் நடைபெற்று வரும் பணிகள், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் அமைய உள்ள மருத்துவ வசதிகள் மற்றும் காவல் நிலையம் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்தார்.

இக்கூட்டத்தில் சென்னை நகரின் சீரான மற்றும் சமமான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக அடுத்த 3 ஆண்டுகளில் ரூ. 1000/- கோடி செலவில் 2023-2024-ஆம் ஆண்டின் பட்ஜெட் கூட்டத் தொடரில் வடசென்னை பகுதியினை மேம்படுத்த "வடசென்னை வளர்ச்சி திட்டம்" **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** வழிகாட்டுதலின்படி சட்டசபையில் முன்மொழியப்பட்டது.

Verified RealEstate ™

இத்திட்டத்தின் கீழ் வடசென்னை பகுதியிலுள்ள உள்கட்டமைப்பு பற்றாக்குறை மற்றும் வளர்ச்சியில் உள்ள இடைவெளிகளை கண்டறியும் பொருட்டு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மூலம் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பெருநகர் சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மகளிர் கிறிஸ்துவ கல்லூரி (WCC), சென்னை கிறிஸ்துவ கல்லூரி (MCC) மாணவ - மாணவிகளால் முதன்மை விவரங்கள் சேகரிக்கும் பணியானது மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ஆகஸ்டு மாதம் துவக்கி வைக்கப்பட்டு விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நடத்தப்பட்ட முதன்மை விவரங்கள் சேகரிப்பு பணிகளையும், அவ்விவரங்களின் அடிப்படையில் கலந்தாலோசகர் நிறுவனத்தின் மூலம் மருத்துவம், கல்வி, பொது சுகாதாரம், வீட்டுவசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாடு, வாழ்கை தர மேம்பாடு, வடிகால் வசதி, குடிநீர் வழங்கல், சாலைகள் மற்றும் பிற பொது கட்டமைப்புகளில் உள்ள இடைவெளிகள் கண்டறியப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்ய தேவையான திட்டங்களை இனங்காணும் பணிகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்.

மேலும், இக்கூட்டத்தில் 2023 – 2024 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் சென்னை பெருநகர பகுதியில் உள்ள 26 சட்டமன்ற தொகுதிகளின் மேம்பாட்டிற்கான 34 அறிவிப்புகளுடன் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு அறிவிக்கப்பட்ட 50 அறிவிப்புகளையும் துரிதமாக செயல்படுத்தும்படி அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.எ.பாலசுப்ரமணியன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Verified RealEstate